# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● மே 21, 2022

Weekly E-paper ● May 21, 2022



# தீர்ப்பும் தீர்வும்

சுப.வீரபாண்டியன்

## பேரறிவாளன் விடுதலை

தோழர் கொளத்தூர்மணி

## பாபர் மசூதி முதல் ஞானவாபி மசூதி வரை

தலையங்கம்

## திராவிட நட்புக் கழகம் தொடக்க விழா

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● மே 21, 2022 Weekly E-paper ● May 21, 2022

# தீர்ப்பும் தீர்வும்

**சுப.வீரபாண்டியன்**



கடந்த சில நாள்களுக்கு முன்பு அடுத்தடுத்து வந்த இரண்டு உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் அழுத்தமான ஒரு செய்தியைக் கொண்டு வந்திருக்கின்றன. அந்த வழக்குகளின் தீர்ப்புகள் வேறு அடிப்படையில் ஆனவை என்றாலும், அந்த தீர்ப்புக்கு உள்ளே மாநில சுயாட்சி வழியான கூட்டாட்சிக்கு ஒரு பெரும் இடம் கிடைத்திருக்கிறது.

இரண்டு வழக்குகளில் ஒன்றின் மீதான தீர்ப்புதான், 31 ஆண்டு காலம் சிறையில் வாடிய பேரறிவாளனுக்கு விடுதலையைப் பெற்றுத் தந்திருக்கிறது. இன்னொரு தீர்ப்பு சரக்கு வாகன வரி குறித்து ஒரு விளக்கம் தருகிறது. இந்த இரண்டு தீர்ப்புகளோடும் இந்தியக் கூட்டாட்சித் தத்துவம் பின்னிப் பிணைந்து கிடப்பதை நீதிபதிகள் தெளிவாக தங்கள் தீர்ப்பில் விளக்கியிருக்கிறார்கள். முதல் தீர்ப்பில் அவர்கள் தந்திருக்கிற செய்தி மாநில அரசின் அதிகாரத்தில் யார் ஒருவரும் தலையிட முடியாது என்பதுதான். தமிழ்நாட்டின் ஆளுநருக்காகவே சொல்லப்பட்ட செய்தி போல அமைந்திருக்கிறது. இரண்டாவது தீர்ப்பில் இன்னும் துல்லியமாக அவர்கள் ஒன்றை வரையறுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்திய அரசும், மாநில அரசுகளும் இரண்டும் சமமானவை, சமநேரத்தில் செயல்படக் கூடியவை, தனித்தன்மை வாய்ந்தவை (Equal, Simultaneously, and Unique) என்று மூன்று சொற்களை நீதிபதிகள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

ஒவ்வொரு சொல்லும் மிக ஆழ்ந்த பொருளுடையது-யாரும் யாருக்கும் இங்கு எஜமானரும் இல்லை, அடிமைகளும் இல்லை என்பதுதான் இந்தச் சொற்களின் சாரம். அதேபோல ஒரே நேரத்தில் கடமையாற்ற இரண்டு அரசுக்கும் உரிமை இருக்கிறது என்றும் கூறுகிறார்கள். மூன்றாவதாக ஒவ்வொரு அரசும் ஒவ்வொரு விதத்தில் தனித்துவம் வாய்ந்தது என்பதை விளக்குகிறார்கள். அடுத்ததாக, நீதிபதிகள் சொல்லி இருக்கிற இன்னொரு தொடரும் குறிக்கத்தக்கது. ஜனநாயகமும் கூட்டாட்சியும் ஒன்றையொன்று சார்ந்து இருப்பவை (Democracy and Federalism are interdependent) என்று நீதிபதிகள் குறிப்பிடுகிறார்கள். ஆம், கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படை ஜனநாயகம்தான். இருப்பினும் இந்தக் கூட்டாட்சி முறை என்பது இந்திய அரசமைப்புச் சட்டத்தில் தெளிவாகக் கூறப்படவில்லை என்பது ஒரு கசப்பான உண்மை. அதற்கான காரணங்களை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இன்றைக்கு இருக்கிற இந்திய அரசமைப்புச் சட்டம் 1949 நவம்பர் 26 அன்று ஏற்கப்பட்டு, 1950 ஜனவரி 26 முதல் நடைமுறைக்கு வந்தது. இந்தச் சட்டம் ஏற்கனவே ஆங்கிலேயர்களால் 1935 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட சட்டத்தையே பெரிதும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆங்கிலேயர்கள் தந்த அந்தச் சட்டத்தில் மாநிலங்களுக்கு எந்த ஒரு பெரிய உரிமையும் வழங்கப்படவில்லை. இதனை நாடாளுமன்றத்தில் பலர் கேள்வியாக எழுப்பினர். அப்போது அவற்றுக்கு விடையளித்த சட்ட அமைச்சராக இருந்த அண்ணல் அம்பேத்கர், அந்தக் குற்றச்சாட்டுகளில் இருந்த உண்மைகளை மறுக்கவில்லை. எனினும் மாநில அரசுகளுக்கு ஓர் இறையாண்மை இருக்கவே செய்கிறது என்று அவர் வாதிட்டார். அரசமைப்புச் சட்டத்தின் 246(A) மற்றும் 161 ஆகிய விதிகளைக் கணக்கில் கொண்டே அவர் அவ்வாறு சொல்லி இருக்க வேண்டும். எனினும் நடைமுறையில் அந்தச் சட்டங்கள் ஏட்டளவில்தான் அமைந்திருக்கின்றன. 161ஆம் பிரிவை ஒன்றிய அரசு ஏற்று இருக்குமானால் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் இருக்கும் எழுவர் எப்போதோ விடுதலை ஆகியிருப்பார்கள்.

அப்படி நடக்கவில்லை. ஒன்றிய அரசு தனக்குத் தேவைப்படும் போது மட்டும் அந்த உரிமையை வழங்குகிறது. விலங்குகள் வதைத் தடுப்புச் சட்டம் என்பதன் அடிப்படையில்தான் ஜல்லிக்கட்டு தடை செய்யப்பட்டது. ஆனால் 2017 ஜனவரியில் தமிழ்நாட்டில் நடைபெற்ற எழுச்சிமிகு போராட்டத்திற்குப் பிறகு, தமிழ்நாடு அரசு இயற்றிய சட்டத்தை ஒன்றிய அரசு ஏற்றது.

இவ்வாறாக அரசமைப்புச் சட்டத்தின் ஏழாவது அட்டவணையில் உள்ள மூன்று பட்டியல்களில், ஒன்றிய அரசுப் பட்டியல், மாநில அரசுப் பட்டியல், ஒத்திசைவுப் பட்டியல் ஆகியவற்றில், ஒத்திசைவுப் பட்டியல் ஒன்றிய அரசின் பட்டியலாகவே மாறிவிட்டது. அதனைப் பொதுப்பட்டியல் என்றும் சிலர் தவறாகக் கூறுகின்றனர். அவ்வாறு இல்லை. தனித்தன்மை வாய்ந்த தனித்தனியாக ஒன்றிய அரசும் மாநில அரசுகளும் சட்டம் இயற்றுவதற்கான உரிமையை ஒத்திசைவுப் பட்டியல் நடைமுறையிலும் பெற்றிருக்கவேண்டும். நம் நாட்டுச் சட்டத்தில் ஏராளமான சிக்கல்கள் உள்ளன. அவற்றை இந்த இரண்டு தீர்ப்புகளும் ஓரளவிற்காவது சரி செய்யும் என்ற நம்பிக்கை வருகிறது.

தீர்ப்புகள் வந்திருக்கின்றன, தீர்வு எப்போது?

# பேரறிவாளன் விடுதலை

தோழர் கொளத்தூர்மணி, தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்

**பேரறிவாளன் அவர்களின் விடுதலைக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்தவர்களுள் ஒருவராக நீங்கள் இந்த விடுதலையை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

இதை ஒரு மகிழ்ச்சியான நிகழ்ச்சியாகப் பார்க்கிறேன். தண்டனை என்பது தவறைச் சீர்திருத்துவதற்கான முயற்சிதான். நாம் அப்படித்தான் அதைப் பார்க்கிறோம். ஆனால் இவர்கள் ஒரு மனிதனைப் பழிவாங்குவது என்பதாகப் பார்க்கிறார்கள். சிறைத் துறை என்பது "*correctional service*", ஒருவரைத் திருத்துவதற்கான துறைதான். அப்படி இருக்கிறபோது ஒருவர் குற்றம் செய்திருந்தாலும் அவர் பொது சமூகத்தில் கலந்து வாழ்வதற்குத் தகுதி பெற்று இருக்கிறாரா என்பதைத்தான் பார்க்க வேண்டும். சிறையாளியை மட்டும்தான் கணக்கில் கொள்ளவேண்டும் என்பதுதான் விடுதலை. ஆனால் இவ்வழக்கில் அதற்கு மாறாக "முன்னாள் பிரதமரைக் கொலை செய்துவிட்டார்கள்" என்று காரணம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். வழக்கமாக ஆயுள் தண்டனைக் காலம் முடிந்தவுடன் தண்டனையை மறுபரிசீலனை செய்வார்கள். 20 ஆண்டுகளுக்கு மேல் யாரையும் சிறையில் வைத்திருக்க மாட்டார்கள். எனவே 30 ஆண்டுகாலம் இவர்களைச் சிறையில் வைத்திருந்தது அரசியல் நோக்கத்திற்காகவே. மேலும் இந்த வழக்கில் நீதிமன்றத்தின் மரபும் மீறப் பட்டது. எந்த ஒரு வழக்கிலும் "*perpetrators*" குற்றத்தை நேரடியாகச் செய்தவர்களுக்குத்தான் உச்சபட்ச தண்டனை கொடுப்பார்கள். ஆனால் இந்த வழக்கில் அனைவருக்கும் உச்ச பட்ச தண்டனையான மரண தண்டனை கொடுத்தார்கள். பல்வேறு சட்டப் போராட்டங்களுக்குப் பின் இந்த விடுதலை கிடைத்திருக்கிறது.



**இதே காரணங்கள் இந்த வழக்கில் சிறையில் உள்ள மற்ற அறுவருக்கும் பொருந்தும் அல்லவா?**

நிச்சயமாகப் பொருந்தும். அவர்கள் வழக்குத் தொடுக்கவில்லை. வழக்குத் தொடுத்தது பேரறிவாளன் மட்டும்தான். அந்த அடிப்படையில் பேரறிவாளனுக்கு விடுதலை கிடைத்திருக்கிறது. மற்றவர்களுக்கும் விடுதலைக்கான வாய்ப்பு இருக்கிறது. இப்போது தமிழக அரசு, மற்றவர்களுக்கான விடுதலையும் சட்ட வல்லுநர்களைக் கொண்டு பரிசீலிக்கப்படும் என்று சொல்லி இருக்கிறது.

**இந்த வழக்கில் மேலும் நாம் வரவேற்கக் கூடிய ஒன்றாக, மாநில அரசின் உரிமைகளை நிலைநாட்டி உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருப்பது பற்றி உங்கள் கருத்து.**

உச்சநீதிமன்றம் இவ்வழக்கில், ஒரு பகுதியில், அரசு முடிவு செய்து விட்டால் ஆளுநரின் ஒப்புதல் இல்லாமலேயே விடுதலை செய்ய முடியும் என்று சுட்டிக்காட்டியிருக்கிறது. "*Rules of business*" என்று சொல்லுவார்கள், அதாவது "*Constitutional courtesy*" என்பதற்காக ஆளுநரிடம் கையெழுத்து வாங்குவது என்று சொல்கிறார்கள். இவற்றை அழுத்தமான சொற்களாக நான் பார்க்கிறேன். ஆளுநர் எந்த அதிகாரமும் அற்றவர் என்பதை அழுத்தமாகச் சொல்வதற்காகவே இந்தச் சொற்களைப் பயன்படுத்தி இருப்பதாகப் பார்க்கிறேன். இன்னொன்று ஆளுநரும் குடியரசுத் தலைவரும் மிக உயர்ந்த பதவிகளில் இருந்தாலும், அமைச்சரவையின் அறிவுரை ஆலோசனையின்படிதான் நடக்க வேண்டும் என்பதையும் மீண்டும் அழுத்திச் சொல்கிறார்கள். இவற்றையெல்லாம் நாம் முக்கியமானதாகப் பார்க்க வேண்டும். இந்த வழக்கைப் பொறுத்த வரையில் "*inexcusable*" அதாவது மன்னிக்க முடியாத தன்மையில் இருக்கிறது என்று உச்ச நீதிமன்றம் சொல்கிறது. எனவே இந்தத் தீர்ப்பில், ஒரு மாநில ஆளுநர் என்பவர் மாநில அரசு எடுக்கும் கொள்கை முடிவுகளுக்குக் கட்டுப்பட்டுச் செயல்பட வேண்டியவர் என்பது திரும்பத் திரும்பப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

**அரசியல் களத்தில், காங்கிரஸ் கட்சி பேரறிவாளன் விடுதலையை எதிர்த்துப் போராட்டம் நடத்துவதை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

ஓ சின்னப்ப ரெட்டி அவர்கள் ஒரு தீர்ப்பில், "நாங்கள் நீதிபதிகள் எல்லாம் மக்களை விட்டு வெகுதூரம் விலகி இருக்கிறோம். இந்த முடிவுகள் எல்லாம் மக்களோடு நெருங்கி இருக்கும் மக்கள் பிரதிநிதிகள் இருக்கிற சட்டமன்றம்தான் முடிவு செய்ய வேண்டும்" என்று நீண்ட காலத்திற்கு முன்பு சொன்னார். நீதிபதிகளுக்குச் சில கட்டுப்பாடுகள் உண்டு. அவர்கள் மக்களோடு தொடர்பு இல்லாமல் இருக்கிறார்கள். ஆனால் அரசியல் கட்சிகள் மக்களோடு இருக்கவேண்டியவை. மக்கள் பிரதிநிதிகளாக அவர்கள் செயல்பட வேண்டுமானால் மக்களுடைய வாக்கு வேண்டும். இப்படி ஒட்டுமொத்தத் தமிழ் மக்களுடைய கருத்துக்கு எதிராக நடந்து கொள்வது, பேசுவது, போராட்டம் என்ற செய்வது எல்லாம் மிகக் கேவலமான ஒன்றாகும். ஒரு கட்டத்தில் நீதிமன்றம் விடுவித்தால் எங்களுக்கு மறுப்பில்லை என்று சொன்னார்கள். இன்று நீதிமன்றமே தீர்ப்பு சொன்னதற்குப் பிறகும் வாயில் துணியை கட்டிக் கொள்கிறோம் என்று சொன்னால், அவர்கள் வாழ்நாள் முழுவதும் கட்டிக் கொண்டு இருந்தாலே தமிழ் நாடு நன்றாக இருக்கும். ஒரு அயோக்கியன் வராமல் தடுப்பதற்கென்று இன்னொருவரை ஆதரிக்க வேண்டிய கட்டாயத்தில் தேர்தல் அரசியலில் இருக்கிறோம். வாக்களிக்கும் போதும் அப்படித்தான் வாக்களிக்கிறோம். இதெல்லாம் உண்மைதான். ஆனால் நம்மைப் போன்ற இயக்கங்கள் எவ்வளவு நாள்களுக்கு, தமிழ் மக்கள் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாதவர்களைத் தூக்கிச் சுமப்பது? இது பற்றி விரிவாக விவாதிக்க வேண்டிய தேவை இருப்பதாக நான் நினைக்கிறேன்.

நேர்காணல் - **மா.உதயகுமார்**

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## பாபர் மசூதி முதல் ஞானவாபி மசூதி வரை

பாபர் மசூதியை வைத்து மதவாத அரசியலை செய்து கொண்டிருந்தவர்கள், அந்த விவகாரம் முடிந்து விட்ட பிறகு மீண்டும் அதே பாணியில் மதவாத அரசியலைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் சங்பரிவாரக் கும்பலுக்கு மதத்தை முன்னிறுத்தி கலவரங்களை உண்டாக்குவதைத் தவிர மக்களுக்கான ஆக்கபூர்வமான அரசியல் எதையும் செய்யத் தெரியாது. இதுதான் இங்கே வரலாறாகவும் இருக்கிறது.

குதுப்மினாரை விஷ்ணு ஸ்தம்பம் என்று விஷ்வ ஹிந்து பரிஷத் சொல்கிறது. இதற்கு ஆதரவாக இந்தியத் தொல்லியல் துறையைச் செயல்பட வைக்கிறார்கள். மேலும் 27 ஜெயின்-இந்துமதக் கோவில்கள் இடிக்கப்பட்டுக் குதுப்மினார் கட்டப்பட்டதாகச் சொல்கிறார்கள்.

தாஜ்மகாலின் அறைகளுக்குள் இந்துக் கடவுள்களின் சிலைகள் இருப்பதாகவும், அவற்றைத் தொல்லியல் துறை ஆய்வு செய்ய வேண்டும் என்றும் பாஜகவின் ஊடகப் பிரிவைச் சேர்ந்தவர் அலகாபாத் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

வாரணாசி ஞானவாபி மசூதியில் சிவலிங்கம் கிடைக்கப் பெற்றதாகச் சொல்லி மசூதியின் ஒரு பகுதிக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது. வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது.

இந்துக்களுக்காகப் போராடுகிறோம் என்று சங்பரிவாரக் கும்பல் சொல்வது இஸ்லாமியர்களைப் பகைவர்களாகக் காட்டி இந்து-முஸ்லிம் கலவரங்களை ஏற்படுத்துவதற்குத்தான்.

வழிபாட்டு இடங்களுக்கான சட்டம் இயற்றப்பட்ட போதிலும், அச்சட்டம் காற்றில் பறக்க விடப்பட்டிருக்கிறது.

நாட்டில் எந்நேரமும் மதக்கலவரப் பதற்றத்தை ஏற்படுத்தி, மக்கள் பிரச்சினைகள் எதையுமே பேசவிடாமல், மக்களின் வாழ்க்கை நிலையை மிக மோசமான நிலைக்குத் தள்ளியுள்ளன பார்ப்பனக் கும்பல்கள்.

பார்ப்பனியத்திற்குப் பலியாகும் பாமர மக்களுக்கப் பகுத்தறிவுப் பாதையைக் காட்ட வேண்டும்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com


டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408

# பகுத்தறிவை அடிமைப்படுத்தும் மதம்!

## தந்தை பெரியார்



மதமானது இன்று உலகில் மனித சமூகத்தின் வாழ்வைத் துக்க மயமாக்கி ஜீவாராசிகளில் மனிதனுக்கென்று உள்ள பகுத்தறிவை அடிமைப்படுத்தி ஒற்றுமையைக் குலைத்து மனிதனுக்கு மனிதன் வெவ்வேறு இனம் என்று எண்ணும்படி செய்து வருகின்றது என்பதற்கு உதாரணம் தேவையில்லை என்றே கருதுகின்றோம்.

“தேசிய சிங்கங்”களான அலி சகோதரர்கள் ஒரு காலத்தில் “நாங்கள் முதலில் மகம்மதியர்கள் பிறகுதான் இந்தியர்கள்” அதாவது முதலாவது மதம். பிறகுதான் தேசம் என்றும், “உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா” காந்தி “நானே இந்து மதத்தின் உருவே! நான் மூச்சு விடுவதும், வாங்குவதும் இந்து மதத்திற்காகவே! நான் உண்பதும், உயிர் வாழ்வதும் இந்து மதத்திற்காகவே! மதத்தைக் காக்கவே நான் சுயராஜ்யம் கேட்கிறேன்! அதாவது இந்து மதம்தான் எனக்கு முதலும், கடைசியும்” என்றும் “பழைய காங்கிரஸ்வாதி, மாசற்ற தேசாபிமானி, ஒப்பற்ற தியாகி” என்று சொல்லப்பட்ட பண்டித மதன் மோகன்மாளவியா “எனது மதத்தையும், எனது ஜாதியையும் காப்பதே எனது முதல் வேலை” என்றும், அதாவது வருணாசிரமத்தைக் காக்கத்தான் நான் தேசியவாதி என்று சொல்லும்படி செய்துவிட்டது என்றால் மதத்தின் ஆதிக்கத்திற்கு வேறு என்ன உதாரணம் வேண்டும் என்று கேட்கிறோம்.

பெருத்த தேசாபிமானிகள், தேசத்துக்காகச் சகலத்தையும் தியாகம் செய்தவர்கள் என்று சொல்லும்படியான இவர்களே அவரவர்களின் மதத் தத்துவத்தை உள் எண்ணமாக வைத்து அவற்றின் கொள்கைகளைக் காப்பதற்காகவே அவர்களது தேசாபிமானமும், உயிர் வாழ்வும் இருந்து வருகிறது என்றால் மற்ற சாதாரணமான அதாவது மதத்தைத் தவிர, மற்றொன்றும் அறியாத பாமர மக்களின் யோக்கியதைப் பற்றி நாம் விளக்க வேண்டுமா என்று கேட்கிறோம்.

வட்டமேஜை மகாநாடு உடைந்து போனதும், அரசியல் சீர்திருத்தத்தில் இந்திய மக்கள் ஒன்றுபடாமல் போனதும், இந்து முஸ்லீம்கள் ஒருவரை ஒருவர் நம்பாமல் அரசியலில் தனித் தொகுதி வேண்டுவதற்கும், காங்கிரசும், முஸ்லீம் லீக்கும் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருப்பதற்கும், தீண்டப்படாத மக்கள் தனித் தொகுதி கேட்பதற்கும், கூட்டுத் தொகுதியில் தனிப் பிரதிநிதித்துவம் ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்பதற்கும் மக்களை மக்கள் தீண்டப்படாதவராய், கீழ்மேல் ஜாதியராய்க் கருதப்பட்டு வருவதற்கும், மதமே காரணமாய் இருந்து வருகின்றது என்பதையும் எவராவது மறுக்க முடியுமா என்று கேட்கிறோம்.

மற்றும் மனித சமூக வாழ்வுக்கு ஏற்ற சீர்திருத்தங்கள், முன்னேற்றங்கள் என்பவைகளில் பெரும்பான்மையான மக்களால் அவசியம் என்றும், அறிவுக்கு ஏற்றது என்றும் கருதப்படும் அநேக விஷயங்களைப் பற்றி சட்டங்கள் செய்யவோ, சட்டங்கள் செய்தாலும் அமலுக்குக் கொண்டு வரவோ தடையாய் இருந்து வருவதற்கு மதங்களே காரணமாக சொல்லப்படுகின்றதா இல்லையா என்று கேட்கிறோம். ஆகவே மனித வாழ்க்கைக்கு மதங்கள் இதைவிட வேறு என்ன கொடுமைகள் செய்யவேண்டும் என்பது நமக்கு விளங்கவில்லை.

(பகுத்தறிவு வார இதழ் – 09.09.1934)



### கன்னியாகுமரியில்

# திராவிட நட்புக் கழகம்

### தொடக்க விழா - 18.05.2022






















மே 18ஆம் தேதி கன்னியாகுமரியில் திராவிட நட்புக் கழகம் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு அரசின் மாண்புமிகு அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மனோ தங்கராஜ் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

திராவிடக் கருத்தியலை ஏற்றுக் கொள்பவர்கள், ஆனால் கடவுள் மத நம்பிக்கை உடையவர்கள் திராவிட இயக்கத் தமிழர் பேரவையில் இணைந்து பணியாற்ற முடியாது என்பதால் அவர்களை உள்ளடக்கிய ஒரு துணை அமைப்பாக அல்லது வெளி வட்டமாக திராவிட நட்புக் கழகம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

கடவுள் மத நம்பிக்கை உடையவர்களாக இருந்தாலும்,

1.சமூக நீதி

2.ஜனநாயகம்

3. மதநல்லிணக்கம் ஆகிய மூன்றையும் ஏற்றுக் கொள்பவர்கள் திராவிட நட்புக் கழகத்தில் இணையலாம்.

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் வழிகாட்டலில் திராவிட நட்புக் கழகம் செயல்படும்.

இணைய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள்:

தெற்கு மண்டலம்

முனைவர்.அருட்பணி.தனிஸ்லாஸ் 9585531802

வடக்கு மண்டலம்

தோழர் இளஞ்சித்திரன் 9885600846

மேற்கு மண்டலம்

தோழர் விஜயா (கோவை) 9626741997

கிழக்கு மண்டலம்

தோழர் நா.முத்துராஜ் 9488010982

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian